**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.18**

**தேதி: 23.10.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **திரு.ரமணி** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சென்னை குமரன் நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மானாமதுரை வட்டக் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 06.01.2015ம் தேதி 23.40 மணிக்கு சிப்காட் காவல் நிலையக் குற்ற எண்.3/2015 வழக்கு சம்பந்தமான கோப்பை சார்பு ஆய்வாளர் பன்னீர் செல்வத்திடமிருந்து பெற்றுக் கொண்டு 07.01.2015 அன்று அதிகாலை 00.10 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த வரைபடம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.15** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமான புகார் மனு என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே இடத்தில் அதிகாலை 01.40 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் இறந்து போன ராஜேஸ்வரியின் அருகில் சிதறிக் கிடந்த ரத்தம் பட்ட மற்றும் ரத்தம்படாத மண் மற்றும் இறந்து போன தனபாக்கியம் அருகிலிருந்த ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத மண் மற்றும் இறந்து கிடந்த ஆறுமுகம் என்பவருக்கு அருகில் இருந்த ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவற்றிற்கு அருகே கிடந்த வுே 63 யு 9093 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினேன்.

அந்த பைக் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விஏஓ மூலம் அருவாள் அச.எ.பொ.1 ஆக மீண்டும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதை அ.சா.பொ.2 ஆக பிரித்து வாசித்துக் கொள்ள வேண்டுகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக கைப்பற்றிய இறந்து போன ராஜேஸ்வரி, தனபாக்கியம், ஆறுமுகம் ஆகியோர்களது பிரேதத்திற்கு அருகே கிடந்த ரத்தம்பட்ட மண் என்னிடம் காண்பிக்கப்படுபவை தான். அவைகள் முறையே **அ.சா.பொ.3, 4,** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இறந்து போன ராஜேஸ்வரி, தனபாக்கியம், ஆறுமுகம் ஆகியோர்களது பிரேதத்திற்கு அருகே கிடந்த ரத்தம்படாத மண் என்னிடம் காண்பிக்கப்படுபவை தான். அவைகள் முறையே **அ.சா.பொ.6,7,8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பைக் ரத்தம் படிந்த மற்றும் ரத்தம் படாத மண் ஆகியவற்றை கைப்பற்றிய சம்பந்தமான அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுபவை தான் அவை ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறந்து போன ராஜேஸ்வரி, தனபாக்கியம், ஆறுமுகம் ஆகியோர்களது பிரேதத்தை மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைததேன். பின்னர் சம்பவயிடத்திலிருந்த சாட்சிகள் வீராச்சாமி, குஞ்சரம், உடையணசாமி, முத்துராக்கு, மாயழகு, ஆறுமுகம், மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் மற்றும் பைக் ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது சமபந்தமான படிவம் 91 என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ. 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.01.2015ம் தேதி மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கு அருகே வைத்து காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை இறந்து போன ராஜேஸ்வரி என்பவரது இறப்பு குறித்து அறிய பஞ்சாயத்தார்கள் முன் பிரேத விசாரணை நடத்தினேன். அது சம்பந்தமான எனது அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்து போன தனபாக்கியம் என்பவரது இறப்புக்கான காரணம் குறித்து மானாமதுரை குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.கண்ணதாசன் அவர்கள் பிரேத விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்து போன ஆறுமுகம் என்பவரது இறப்பிற்கான

காரணத்தை அறிய மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சாந்தி பிரேத விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்து போன ராஜேஸ்வரி என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய பெண் காவலர் திருமதி.செங்கொடி மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். இறந்து போன தனபாக்கியத்தின் உடலை பிரேத பரிசோதனை செய்ய பெண் காவலர் திருமதி.சத்யா மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். இறந்து போன ஆறுமுகத்தின் உடலை பிரேத பரிசோதனை செய்ய பெண் காவலர் திருமதி.ராதா என்பவர் மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். பிரேத பரிசோதனை முடித்தப் பிறகு இறந்து போன ராஜேஸ்வரி அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த வெள்ளை கத்திரி பூப் போட்ட நைட்டியையும் ஆரஞ்சு கலர் பாவாடையையும் இளம் பச்சை கலர் ஜாக்கெட்டையும் செங்கொடி மருத்துவரிடமிருந்து பெற்று வந்து ஆஜர்படுத்தினார். அந்த நைட்டி, பாவாடை மற்றும் ஜாக்கெட் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அவைகள் முறையே அ.சா.பொ.9, 10, 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை முடிந்த பிறகு இறந்து போன தனபாக்கியத்தின் உடலிலிருந்த ரத்தக்கறை படிந்த சிவப்பு வெள்ளை பூப் போட்ட புடவை, கத்திரி பூ கலர் பாவாடை, ரோஸ் கலர் ஜாக்கெட் ஆகியவற்றை காவலர் சத்யா மருத்துவரிடமிருந்து பெற்று வந்து ஆஜர்படுத்தினார். அந்த புடவை, பாவாடை, ஜாக்கெட் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அவை **அ.சா.பொ.12 முதல் 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை முடிந்தப்பின் இறந்து போன ஆறுமுகத்தின் உடலிலிருந்த ரத்தக்கறை படிந்த கருப்பு கலர் பாவாடை, நீல வெள்ளை ஊதா கலர் புடவை, கருப்பு ஊதா கலர் சால்வை ஆகியவற்றை பெண் காவலர் ராதா மருத்துவரிடம் இருந்து பெற்று வந்து ஆஜர் படுத்தினார். அந்த பாவாடை, புடவை, சால்வை என்னிடம் காண்பிக்கப்படுபவை தான். அவை **அ.சா.பொ.15 முதல் 17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உடைகளை கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது சம்பந்தமான படிவம் 91 என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மானாமதுரை அரசு மருத்துவமனையில் வைத்து 07.01.2015 அன்று சாட்சி இருளப்பன்,

செல்வி.கார்த்தீஸ்வரி, கண்ணன், பெண் காவலர் செங்கொடி, சத்யா, ராதா, ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியான பாண்டிதுரையை 07.01.2015 அன்று மதியம் 02.00 மணியளவில் கிருங்காக்கோட்டை பஸ் ஸ்டாப் அருகே வைத்து கிருங்காக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் திரு.மகேந்திரன், சிறுகுடி குரூப் கிராம உதவியாளர் பாலகிருஷ்ணன் முன்னிலையில் கைது செய்து விசாரித்ததில் அவர் 02.15 மணிக்கு தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் எதிரியும் சாட்சிகளும் கையெழுத்து செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் அருவாளை முருகபாஞ்சான் ஆற்றுப் பாலத்திற்கு கீழ் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்கிறேன் என எதிரி பாண்டிதுரை கூறியுள்ளார். ஒப்புதல் வாக்கமூலத்தின் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அன்று மதியம் 03.30 மணியளவில் முருகபாஞ்சான் பிரிவு ஆற்றுப் பாலத்தின் கீழ் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய ரத்தக்கறை படிந்த அருவாள் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுகை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அருவாள் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது அ.சா.பொ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கைப்பற்றியதற்கான அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் நிலையத்திற்கு அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றிய அருவாளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது சம்பந்தமான படிவம் 91 **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம நிர்வாக அலுவலர் மகேந்திரன், உதவியாளர் பாலக்கிருஷ்ணன், சார்பு ஆய்வாளர் திரு.பன்னீர் செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 08.01.2015ம் தேதி சாட்சிகள் வீராச்சாமி, குஞ்சரம் மற்றும் மாயழகு ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போனவர்களது உடல்களை பிரேத பரிசோதனை செய்த மானாமதுரை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஸ்டாலின் பால்மாஸ்கி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இறந்து போன ராஜேஸ்வரி,

தனபாக்கியம் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களது பிரேத பரிசோதனை அறிக்கைகளை பெற்றேன். அவை என்னிடம் காண்பிக்கப்படுபவை தான். அவைகள் அ.சா.ஆ.7 முதல் 9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை ரசாயண பரிசோதனை செய்வதற்கு நீதிமன்ற வேண்டுகோள் கடிதம் பெற்று அவற்றை காவலர் செங்கொடி மூலம் ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக மானாமதுரை கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் வழங்கிய கடிதம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இது சம்பந்தமாக ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வக அறிவியலாளர் திரு.வைரமுத்துவை விசாரித்து அவரது ஆய்வறிக்கையைப் பெற்றேன். அது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமான சிராலஜி அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. என்னுடைய விசாரணையில் சாட்சிகள் குவிமுச பிரிவு 161(3) ன் கீழான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போலவே சொன்னார்கள். பின்னர் இவ்வழக்கில் சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சிப்காட் காவல் நிலையத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 15 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்று சொன்னால் அரை மணிநேரம் ஆகும். கால தாமதமாக புகார் கிடைக்கப் பெற்றது என்று சொன்னால் அது சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்று கேட்டால் வீராச்சாமி எழுதியதாக சொன்னார். அவரது வாக்குமூலத்தில் புகாரை தான் எழுதியதாக எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்று கேட்டால் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரில் உள்ள கையெழுத்தும் புகாரில் உள்ள எழுத்தும் வேறு வேறாக உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 07.01.2015 அன்று 23.00 மணிக்கு நிலையத்திலிருக்கும் போது புகாரைப் பெற்றதாக சாட்சி பன்னீர் செல்வம் எனது விசாரணையில் சொன்னதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு தான் குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சாட்சி தவறுதலாக அவ்வாறு எழுதப்பட்டுவிட்டதாக கூறுகிறார்) அவ்வாறு தவறுதலாக எழுதப்பட்டுவிட்டதாக நான் மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான்

விசாரித்த சாட்சிகளில் எவரும் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் அருவாளில் ரத்தம் படிந்திருந்ததாக எனது விசாரணையில் சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிக்கும் அவரது மனைவிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. (சம்பவம் நடந்த தேதிக்கு சுமார் 5 மாதத்திற்கு முன்பு மானமாதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ராஜேஸ்வரி புகார் கொடுத்துள்ளதாக சாட்சி கூறுகிறார்) (அவ்வாறு புகார் எதுவும் பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளருக்கு சம்மன் அனுப்பி அவ்வாறு இருந்தால் ஆஜர்படுத்த உத்தரவிடப்படுகிறது. ) (சிராலஜி அறிக்கை தாக்கல் செய்ய தடய அறிவியல் ஆய்வக நிபுணருக்கு சம்மன் அனுப்ப உத்தரவிடப்படுகிறது) குறுக்கு விசாரணை தொடர்ச்சி: அ.சா.பொ.2 அருவாளை மருத்துவரிடம் காட்டி விசாரித்தேனா என்று கேட்டால் அருவாளை மருத்துவரிடம் காட்டவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எதிரியின் மகன் இருந்ததாக சாட்சிகள் என்னிடம் வாக்கு மூலம் கொடுத்தார்களா என்று கேட்டால் ராஜேஸ்வரி இடுப்பில் குழந்தை வைத்திருந்ததாக சாட்சிகள் வாக்குமூலங்கள் கொடுத்துள்ளனர். குழந்தையை என்னவானது என்று விசாரித்தேனா என்று கேட்டால் எதிரி அவரது தாயாரிடம் ஒப்படைத்துவிட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சொல்லியுள்ளார். குழந்தையை எதிரியின் தாயார் பெற்றுக் கொண்டாரா என்பது குறித்து எதிரியின் தாயாரை இந்த வழக்கு சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே நான் சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரியை சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன சாட்சிகள் முன்னிலையில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. குழந்தையின் பெயரை வாக்கு மூலத்தில் சாட்சி குறிப்பிடவில்லை என்று கேட்டால் சாட்சி குறிப்பிடவில்லை. குழந்தையை 08.00 மணிக்கு எதிரி பார்க்கப் போனதாக வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. டாக்டரை நான் விசாரித்த போது இறந்து போன தனபாக்கியத்தின் கை துண்டாகி போனதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. புகாரில் உறவினர்களுக்கு தகவல் சொன்னதாக புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. புகார் கொடுப்பதற்கு முன் இருளப்பன் என்பவருக்கு தகவல் சொல்லிவிட்டு

வந்ததாக புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் புகாரில் சொல்லவில்லை. அ.சா.2, 3-யிடம் சொல்லிவிட்டு புகார் கொடுத்ததாக அ.சா.1 புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால் புகாரில் சொல்லவில்லை, என்னுடைய விசாரணையில் சொன்னார். யாருமே இந்த சம்பவத்தை பார்க்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல. கைது செய்ததற்கு மறுநாள் தான் எதிரியிடமிருந்து ஆயுதத்தை கைப்பற்றினேன் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி பழனி கோவிலுக்கு மாலை போட்டிருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரி தனது மனைவியும் மாமியாரும் மாமியாருடைய மாமியாரும் கொலை செய்யப்பட்டிருப்பதாக 06.01.2015 ம் தேதி காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தார் என்றும் அவரை இந்த வழக்கில் கைது செய்தோம் என்றும் சொன்னால் அது சரியல்ல. சாட்சிகள் எவரும் குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு என்னிடம் சாட்சியம் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வேலூர் கிராமம் குற்ற சம்பவம் அதிகம் நடைபெறும் கிராமம் என்று சொன்னால் அது சரியல்ல. யாரோ செய்த கொலைக்கு எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.